வாக்குமூலம்

சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்

**OS.No. 1242 / 2022**

வழக்கு சாட்சி **PW 1**

1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.கே.சிலம்பரசன் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : நாச்சிமுத்து | தொழில் | : விவசாயம் |
| தந்தை பெயர் | : சண்முகவேல் | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : வெரியப்பூர் | வயது | : 55 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 04.07.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

பிரதிவாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் தொடர்ச்சியான குறுக்கு விசாரணை:

தாவா சொத்துக்கள் எனது குடும்ப உறுப்பினர்களுக்குள் கடந்த 2011-ம் ஆண்டு ஏற்பட்ட பாகப்பிரிவினையின் அடிப்படையில் தான் கிடைக்கப்பெற்றது என்றால் ? ஆமாம். பாகப்பிரிவினை ஏற்பட்ட அன்றைய தினத்தில் தான் பாதை பாத்திய உடன்படிக்கை பத்திரம் குடும்ப உறுப்பினர்களுக்குள் நடந்தது என்றால் ? ஆமாம். பாதை பாத்திய உடன்படிக்கை பத்திரத்தின் மூலமாக தான் எனக்கு பாதை பாத்தியத்தில் உரிமை வருகிறது என்றால் ? சரிதான். எனக்கு 2011-ம் தேதியிட்ட பாதை பாத்திய உடன்படிக்கை பத்திரத்தின் வழியாக எவ்வாறு உரிமை உள்ளதோ அதேபோல் பாதை பாத்திய பத்திரத்தில் கையெழுத்து செய்த மற்ற தரப்பினர்களுக்கும் அதே பாத்தியம் உள்ளது என்றால் ? ஆமாம். இருக்கிறது. பாதை பாத்திய பத்திரத்தில் கையொப்பம் செய்த தரப்பினர்களான எனது பங்காளிகள் சொத்தினை விற்பனை செய்யும் பொழுது சொத்தினை கிரையம் பெற்ற நபருக்கும் அந்த பாதை பாத்தியம் உண்டு என்றால் ? அது தவறு. தவறாக எழுதப்பட்டுள்ளது. பாதையானது எனக்கு தனிப்பட்ட சொத்து அல்ல என்றால் ? தனித்த சொத்து இல்லை. கூட்டாக உள்ள சொத்து ஆகும். 2011-ம் ஆண்டு நானும் எனது பங்காளிகளும் ஏற்படுத்திக் கொண்ட பாகபிரிவினையில் என்னை தவிர எனது பங்காளிகள் குடும்பத்திற்குள் 2011 பாகப்பிரிவினை பத்திரத்தில் உள்ள நபர்கள் அவர்கள் குடும்பத்திற்குள் 2015ம் ஆண்டு பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. 2015-ம் ஆண்டு எனது பங்காளிகள் குடும்பத்திற்குள் ஏற்பட்ட பாகப்பிரிவினையின் தன்மைப்படி அவர்கள் சொத்துக்களை அளவீடுகள் மேற்கொண்டபோது அதை நான் தடுத்தேன் என்றால் ? பாதையை ஆக்கிரமிப்பு செய்தார்கள். அதனால் நான் தடுத்தேன். அவ்வாறு தடுத்ததால் மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்ற கிளையில் எனது பங்காளி சாமியப்பன் என்பவர் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் ? நீதிமன்றத்தில் இருந்து எனக்கு அழைப்பாணை எதுவும் கிடைக்கப்பெறவில்லை. பிரதிவாதிக்கும் எனக்கும் தனிப்பட்ட பகை இருப்பதால் நான் பிரதிவாதி மீது வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? அது

தவறு. இந்த பிரதிவாதி மீது நான் மதுரை உயர்நீதிமன்ற கிளையில், இந்த பிரதிவாதி இடத்தினை ஆக்கிரமிப்பு செய்தார் என்று நீதிப்பேராணை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? ஆமாம். பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்ததாக நான் சொல்லியுள்ள இடம் தாவா சொத்து இல்லை என்றால் ? சரிதான். பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்த சொத்து அரசு சொத்து ஆகும். பொதுப்பாதையை பொறுத்து பிரதிவாதி ஏற்படுத்திய பத்திரத்தில் நான்கு எல்லைகளை மாற்றி குறிப்பிட்டுவிட்டார்கள் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? சரிதான். பிரதிவாதி ஏற்படுத்திய பத்திரத்தில் தட்டச்சு பிழை இருந்ததால் பிரதிவாதி திருத்தல் பத்திரத்தின் வழியாக தவறான பத்திரத்தை சரி செய்துவிட்டார் என்றால் ? அது பற்றி எனக்கு தெரியாது. சாட்சி மீண்டும் திருத்தல் பத்திரமும் தவறு என்று பதில் அளித்தார். நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய நிருபண பிரமாண பத்திரிக்கையில் திருத்தல் பத்திரம் மோசடியாக பிரதிவாதி ஏற்படுத்தியுள்ளார் என்று சொல்லியுள்ளேன் என்றால் ? சரிதான். பிரதிவாதி திருத்தல் பத்திரம் ஏற்படுத்திய பிறகும் வேண்டுமென்றே பிரதிவாதியை அலைக்கழிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? சரியல்ல. பிரதிவாதி தவறான பத்திரத்தை சரிசெய்து பிழைத்திருத்தல் பத்திரம் ஏற்படுத்திவிட்டதால் நான் தாக்கல் செய்த வழக்கிற்கு வழக்குமூலம் அற்றுப்போகிவிட்டது என்று சொன்னால் ? சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.07.04 18:04:54 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்